# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :- | O.S.No.354/2018 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர் | :- | வா.சா– 01 ( PW– 01 ) |
| பெயர் | :- | தங்கம்மாள் |
| தேதி | :- | 21–04–2026 |

**சான்றாளருக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**11 முதல் 13 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

என் தகப்பனார் பெயர் வெள்ளைய கவுண்டர். என் தகப்பனாருக்கு 07 மகன்கள். நான் மட்டும் ஒரு மகள். இராமசாமி, சின்னப்பையன் என்கிற நாராயணன், மாது, சுந்தரராஜன், ஏழுமலை, ரங்கநாதன், சக்திவேல் ஆகியோர் என் சகோதரர்கள் ஆவர். சக்திவேல் இறந்து சுமார் 05 ஆண்டுகளுக்குமேல் இருக்கும். சக்திவேலின் மனைவி சுமதி என்றால் சரிதான். அவர்களின் மகள் பெயர் தீபிகா. மகன் பெயர் பாலாஜி. மேற்சொன்ன மூவரும் இந்த வழக்கில் 11 முதல் 13 வரையிலான பிரதிவாதிகள் என்றால் சரிதான்.

எனக்கு சொத்து வேண்டும் என்று இந்த வழக்கை தாக்கல்செய்-துள்ளேன். தாச கவுண்டர் எனக்கு தாத்தா. அவர் பெயரில் சொத்து உள்ளதை காட்ட ஆவணம் எதையேனும் தாக்கல்செய்துள்ளேனா என்றால் தாக்கல்செய்துள்ளேன். என்ன ஆவணங்கள் என்று எனக்குத் தெரிய-வில்லை. 11-ஆம் பிரதிவாதி எதிர்வழக்குரையில் என்ன சொல்லியுள்ளார் என்று எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. நான் படிக்கவில்லை.

எனக்குத் தெரியாது. வழக்குரைஞரிடம் கேட்டுத் தெரிந்துக்கொள்ளவில்லை. வெள்ளைய கவுண்டருக்கு சொத்து எப்படி வந்தது என்று காட்ட ஆவணம் தாக்கல்செய்துள்ளேன். என்ன ஆவணம் தாக்கல்செய்துள்ளேன் என்றால் எனக்குத் தெரியவில்லை.

எனக்கு எத்தனை வயதில் திருமணம் நடந்தது என்றால் வயது தெரிய -வில்லை. எனக்கு தற்போது எத்தனை வயது இருக்கும் என்றால் 70 வயது இருக்கும். எனக்கு 03 மகன்கள். திருமுருகன், மாணிக்கம், தேவேந்திரன்.

என்னுடைய சகோதரர்கள் எப்போது பாகப்பிரிவினை செய்து -கொண்டார்கள் என்று வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்குச் சொத்துக்கள் ஓமலூர் வட்டம், தெசவிளக்கு தெற்கு ஊரில் உள்ளது என்றால் சரிதான். எத்தனை ஏக்கர் என்றால் பரப்பளவு எனக்குத் தெரிய-வில்லை. அதிக சொத்து உள்ளது. எந்த புல எண்ணில் எவ்வளவு சொத்து உள்ளது என்று எனக்குத் தெரியவில்லை. சொத்து விவரம் எதை பார்த்து எழுதப்பட்டது என்றால் சான்றாளர் சரியாக பதில் சொல்லவில்லை.

என் கணவர் ஊர் கோவில்காடு, பெருமாம்பட்டி என்றால் சரிதான். திருமணம் ஆனதுமுதல் அந்த ஊரில்தான் வசிக்கிறேன் என்றால் அவ்வபோது பிறந்த ஊருக்கு சென்று வருவேன். சக்திவேல் 07.06.2016-ஆம் தேதியன்று இறந்துவிட்டார் என்றும் 06 ஆண்டுகளுக்குமுன்தான் இறந்தார் என்று நான் சொல்வது தவறு என்றால் இருக்கலாம். நான் அவ்வபோது பிறந்த ஊருக்கு சென்று வருவேன் என்று நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

14.05.2007-ஆம் தேதியன்று வெள்ளைய கவுண்டரும் அவருடைய மகன்களும் பாகப்பிரிவினை பத்திரம் எழுதிக்கொண்டனர் என்றால் அது எனக்குத் தெரியாது. அந்த நிகழ்வு எனக்குத் தெரியும் என்றும் இந்த வழக்கிற்காக தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

மூத்த சகோதரர் இராமசாமி எப்போது இறந்தார் என்றால் 10, 20 ஆண்டுகள் இருக்கும். 14.05.2007-ஆம் தேதியன்று என் தகப்பனார் வெள்ளையகவுண்டர், இராமசாமி மனைவி பச்சயம்மாள், அவருடைய மகன்கள் இராமமூர்த்தி, கணேசன், என்னுடைய சகோதரர்கள் நாராயணன் என்கிற சின்னப்பையன், சுந்தரராஜன், ஏழுமலை, ரங்கநாதன், சக்திவேல், மாது மனைவி மலர்கொடி ஆகியோர் பாகம் பிரித்துக்கொண்டனர் என்றால் எனக்குத் தெரியாது. பாகம் பிரித்தது எனக்கு தெரியும் என்றும் தெரியாது என்று நான் பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

16.07.2007-ஆம் தேதியன்று சக்திவேலுக்கு என் தகப்பனார் அறுதியாவணம் எழுதிக் கொடுத்தார் என்றால் அது எனக்குத் தெரியாது. என் தகப்பனாருக்கு படிக்க தெரியாது. அவரை அழைத்துச் சென்று வாங்கியிருப்பார்கள். வழக்குரையில் ஆரம்பத்தில் சொத்து விவரத்தை ஆங்கிலத்தில் சொல்லிவிட்டு பிறகு தமிழில் குறிப்பிட்டேன் என்றால் அதுப் பற்றி எனக்குத் தெரியவில்லை. அறுதியாவணம் எழுதி வைத்தது எனக்கு தெரியும் என்றும் தெரியாமல் அழைத்துச் சென்று கையொப்பம் வாங்கியிருப்பார்கள் என்று நான் பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

21.07.2009-ஆம் தேதியன்று ஆனையம்மாள் என்னுடைய மகன் திருமுருகனும் விற்பனைக்கான ஒப்பந்தம் செய்துள்ளனர் என்றால் அது எனக்குத் தெரியாது. அந்த சங்கதி எனக்கு தெரியும் என்றும் எனக்கு தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

20.09.2015-ஆம் தேதியன்று இராமசாமியின் மகன் கணேசன் செல்வம் என்பவருக்கு சொத்தை விற்றுள்ளார் என்றால் இருக்கலாம். அதுப் பற்றி எனக்குத் தெரியாது. 2007-ஆம் ஆண்டு ஏற்பட்ட பாகப்பிரிவினையில் அவருக்கு கிடைத்த சொத்தில் ஒருபகுதியைதான் விற்றுள்ளார் என்றால் அது எனக்குத் தெரியவில்லை. அந்த பத்திரத்தை இரத்து செய்ய இந்த வழக்கில் நான் நிவாரணம் கோரவில்லை என்றால் மொத்தமாகதான் கேட்டுள்ளேன். தனிப்பட்ட முறையில் கேட்கவில்லை என்றால் சான்றாளர் சரியாக பதில் சொல்லவில்லை.

18.12.2013-ஆம் தேதியன்று சுமதியின் கணவர் சக்திவேலும் என்னுடைய 02-ஆம் மகன் மாணிக்கமும் விற்பனைக்கான ஒப்பந்தம் செய்துகொண்டனர் என்றால் இருக்கலாம். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் எது என்னுடைய மகனுடைய நிழற்படம் என்றால் 03-ஆம் நிழற்படமாக இருக்கலாம். அந்த ஒப்பந்தத்தில் இதன் அடியில் கண்ட சொத்து எங்களில் 01-ஆம் நபர் சக்திவேல் பெயருக்கு கடந்த 14.05.2007-ஆம் தேதியன்று தாரமங்கலம் சார்பதிவாளர் அலுவலத்தில் பதிவுசெய்யப் -பட்ட பாகப்பிரிவினை பத்திரப்படி G அட்டவணை சொத்தாக பாத்தியப்பட்ட என்ற வாசகம் எழுதப்பட்டுள்ளது என்றால் அது எனக்குத் தெரியாது.

என் மூத்த மகன் திருமுருகனின் மனைவி பெயர் ஜானகி. 25.03.2015-ஆம் தேதியன்று ஜானகியும் சக்திவேலும் சுவாதீனத்துடனான விற்பனைக்-கான ஒப்பந்தம் எழுதிக்கொண்டார்கள் என்றால் இருக்கலாம். எனக்குத் தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தின் நகல் ஜானகியின் நிழற்படம் உள்ளதா என்றால் உள்ளது. அந்த ஒப்பந்தத்தில் இதன் அடியில் கண்ட சொத்து எங்களில் 01-ஆம் நபர் சக்திவேல் பெயருக்கு கடந்த 14.05.2007-ஆம் தேதியன்று தாரமங்கலம் சார்பதிவாளர் அலுவலத்தில் பதிவுசெய்யப்பட்ட பாகப்பிரிவினை பத்திரப்படி G அட்டவணை சொத்தாக பாத்தியப்பட்ட என்ற வாசகம் உள்ளது என்றால் எனக்குத் தெரியாது.

14.11.2016-ஆம் தேதியன்று சக்திவேல் மனைவி சுமதியும் எனது மாணிக்கமும் சேர்ந்து ஏற்கனவே நிறைவேற்றிய விற்பனைக்கான ஒப்பந்தத்தை இரத்து செய்துகொண்டார்கள் என்றால் அது எனக்குத் தெரியாது. 2007-ஆம் ஆண்டு என் சகோதரர்களுக்கு இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை பற்றி என் குடும்பத்தினருக்கு தெரியும் என்றும் எனக்கு தெரியாது என்றும் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2007-ஆம் ஆண்டு ஏற்பட்ட பாகப்பிரிவினையில் என் தகப்பனார் வெள்ளையகவுண்டருக்கு அந்த பத்திரத்தில் அ அட்டவணையில் 50 சென்ட் நிலம் ஒதுக்கப்பட்டது என்றால் அது எனக்குத் தெரியாது. மேலும் அவர் இறந்தபிறகு அந்த 50 சென்ட் சக்திவேலுக்கு செல்ல வேண்டும் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் அது எனக்குத் தெரியாது. என் தகப்பனாருக்கு எழுதப் படிக்க தெரியாது.

என் தகப்பனார் இறந்து சுமார் 20 ஆண்டுகள் இருக்கும். அவர் இறந்த பிறகு 50 சென்ட் நிலம் சக்திவேலின் சுவாதீனத்தில் இருந்தது என்றால் சான்றாளர் சரியாக பதில் சொல்லவில்லை. என் சகோதரர்களின் குடும்பத்தினர் அனைவரும் தனிதனியாக விவசாயம் செய்கின்றனர் என்றால் இல்லை. கூட்டாகதான் செய்கின்றனர். 2007-ஆம் ஆண்டு பாகப்பிரிவினை நடந்தபின் என் சகோதரர்கள் தனிதனியாக விவசாயம் செய்கிறார்கள் என்றும் நான் இந்த வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

வழக்கு 10-ஆம் இன சொத்து என் தகப்பனாரின் தனிப்பட்ட சொத்து என்றும் அதை அவர் 16.07.2007-ஆம் தேதியன்று பதிவுசெய்யப்பட்ட அறுதியாவணம் மூலம் சக்திவேலுக்கு கொடையாக கொடுத்துவிட்டார் என்றும் சொன்னால் அது எனக்குத் தெரியாது. அந்த பத்திரத்தை நான் இந்த வழக்கில் தாக்கல்செய்யவில்லை என்றால் எல்லா ஆவணங்களையும் கொடுத்துள்ளேன். சக்திவேல் இறக்கும்வரை மேற்சொன்ன சொத்தின் சொத்தை அவர்தான் அனுபோகம் செய்து வந்தார் என்றால் இல்லை. பொதுவாகதான் இருந்தது. சக்திவேல் பெயரில் 247-ஆம் எண் பட்டா தனியாக இருந்தது என்றால் இடம் கூட்டாகதான் உள்ளது. அவர் இறந்தபின் அந்த சொத்தை 11 முதல் 13 வரையிலான பிரதிவாதிகள் அடைந்து அனுபோனம் செய்து வருகின்றனர் என்றால் சரியல்ல. வேறு யாருக்கும் அந்த சொத்தில் உரிமையில்லை என்றால் சரியல்ல. சக்திவேலின் சொத்தை அபகரிக்கும் நோக்கத்தில் நானும் என் மகன்களும் மற்ற பிரதிவாதிகளும் கூட்டுச் சேர்ந்து இடையூறு செய்கிறோம் என்றால் சரியல்ல.

இந்த வழக்கின் 11 முதல் 13 வரையிலான பிரதிவாதிகள் என் மகன்கள் மூவருக்கு எதிராகவும் மேலும் பலருக்கு எதிராகவும் ஓமலூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் முதலேற்பு வழக்கு எண் 10/2019 என்ற வழக்கை தொடுத்தனர் என்றால் அது எனக்குத் தெரியவில்லை. அந்த வழக்கு முழு விசாரணைக்குபிறகு 06.01.2024-ஆம் தேதியன்று சக்திவேலின் மனைவிக்கு சாதகமாக முடிந்தது என்றால் அது எனக்குத் தெரியாது. அந்த வழக்கில் பிரதிவாதிகளுக்கு தோன்றிய வழக்குரைஞர் எனக்கு இந்த வழக்கில் தோன்றியுள்ளார் என்றால் அது எனக்குத் தெரியாது.

எனக்கு திருமணம் நடந்தபோது தேவையான சீர்வரிசைகள் அனைத்தும் கொடுக்கப்பட்டன என்றால் இல்லை. திருமணத்திற்குபின் நான் என் கணவர் ஊரிலேயே நிரந்தரமாக வசித்தேன் என்றும் வழக்குச் சொத்திற்கு ஒருபோதும் வந்ததில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எனக்கு தேவையான சீர்வரிசைகள் செய்யப்பட்டதால்தான் என் தகப்பனார் என் சகோதரர்களுக்கு மட்டும் சொத்தை பிரித்துக் கொடுத்தார் என்றால் சரியல்ல.

சக்திவேல் இறந்தபிறகு நானும், 09-ஆம் பிரதிவாதி ஏழுமலையும் சக்திவேலின் மனைவியான 11-ஆம் பிரதிவாதி சுமதியிடம் நாங்கள் சொல்வதைதான் கேட்க வேண்டும் என்று மிரட்டினோம் என்றால் இல்லை. என் தகப்பனார் 2008-ஆம் ஆண்டே இறந்து போன நிலையில் 2018-ஆம் ஆண்டு பாகம் கோரி தாக்கல்செய்துள்ள இந்த வழக்கு நிலைநிற்காது என்றால் சரியல்ல. என் சகோதரர்களின் குடும்பத்தில் நடந்த உரிமைமாற்ற ஆவணங்கள் பற்றி எனக்கு நன்றாக தெரியும் என்றும் இந்த வழக்கிற்காக தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

சக்திவேலுக்கும் ஜானகிக்கும் 25.03.2015-ஆம் தேதியன்று ஏற்பட்ட விற்பனைக்கான ஒப்பந்தம்பேரில் 1,75,000/- உரூபாய்க்கு விலை பேசப்பட்டு முன்பணம் 50,000/-உரூபாய் கொடுக்கப்பட்டு ஜானகி கிரயம் செய்ய மறுத்ததால் முன்பணத்தை அதிக வட்டியுடன் சுமதியிடமும் சக்திவேலிடமும் கேட்டபோது பிரச்சனை ஏற்பட்டது என்றும் அதனால் எங்கள் குடும்பத்தினருக்கும் சுமதிக்கும் விரோம் ஏற்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல.

நான் தொடர்ந்து பாகம் கேட்டேன் என்றும் பாகம் கொடுப்பதாக என் சகோதரர்கள் சொன்னார்கள் என்றும் நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. 03.10.2018-ஆம் தேதியன்றுதான் 2007-ஆம் ஆண்டின் பாகப் -பிரிவினை பற்றி எனக்கு தெரியவந்தது என்று நான் சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல.

30.09.2018-ஆம் தேதியன்று நான் சொல்வது போன்று எந்த பஞ்சாயத்தும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. நான் அந்த சங்கதியை முதல்விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எனக்கு எந்த நிவாரணமும் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. எனக்கு பாகம் கோர உரிமையில்லை என்றால் சரியல்ல.

2007-ஆம் ஆண்டு நடந்த பாகப்பிரிவினைப்படி வெள்ளைய கவுண்டரின் மற்ற வாரிசுகள் அவரரவருக்கு ஒதுங்கிய இடத்தை தனியாக விவசாயம் செய்து வருகின்றனர் என்றும் வழக்குச் சொத்தில் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. 11 முதல் 13 வரையிலான பிரதிவாதிகள் நான் சொன்னதையும் ஏழுமலை சொன்னதையும் கேட்காததால் மற்ற பிரதிவாதிகளின் தூண்டுதலின்பேரில்

நான் இந்த வழக்கை தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. காலவரம்பு கடந்த நான் தொடுத்த வழக்கு நிலைநிற்காது என்றால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.